
# உடன்பிறப்பே... 77

**நீரை.மகேந்திரன்**

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த ச.அமுதன் அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

ஓவியம் : ரவி பேலட்



# ச.அமுதன் ‘தவ வாழ்க்கை தம்பி!’

*1987-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம் கழகத்தின் போர்க் குணமிக்க வரலாற்றுக்குச் சான்றாக, புதிய தலைமுறை இளைஞர்களை அரசியலுக்குக் கொண்டு வந்த போராட்டமாக அறியலாம். கலைஞர் அறிவித்த அறப்போராட்டக் களம் கண்ட கழகத்தினர் கொத்துக் கொத்தாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டனர்.*

*சென்னை, மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் கலைஞர். மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்களின் ‘கோழை மனம்’ குறித்து, வருத்தப்பட்டு அங்கிருந்து கலைஞருக்குக் கடிதம் எழுதுகிறார், ஒரு கழகத் தோழர். அவருக்கு சென்னை சிறையில் இருந்து பதில் கடிதம் எழுதினார் கலைஞர். அதில் ‘சிறையில் தவத்தைத் தொடருக’ என எழுதி இருந்தார். அப்படியான ‘தவ வாழ்க்கை’ வாழ்ந்த அந்தத் தோழர்தான் ச.அமுதன். விருதுநகர் மாவட்டத்தின் முன்னணி மூத்த தோழர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர் ச.அமுதன்.*

*சிறந்த எழுத்தாளர், பேச்சாளர், களப் பணியாளர். **‘உதயக் கதிர்’, ‘திருப்பு முனை’** ஆகிய இதழ்களை நடத்தியதுடன், கழகம் நடத்திய வார ஏடுகளில் பல கட்டுரைகளை எழுதியவர். இராமநாதபுரம் மாவட்டக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர். கழகத்தின், தலைமை இலக்கிய அணிச் செயலாளராக இருபது ஆண்டு காலம் பொறுப்பு வகித்தவர்.*

*விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருகிலுள்ள ஏ.ராமலிங்கபுரத்தில் 1939-ஆம் ஆண்டு சங்கரமூர்த்தி - லட்சுமி சின்னத்தாய் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர்.*

*பள்ளிப்பருவத்திலேயே கழக ஈடுபாடு கொண்டவர். விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் இளநிலை பொருளாதாரம், மதுரை பல்கலைக்கழகத்தில் எம்.ஏ அரசியல், மைசூர் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ சமூகவியல் ஆகிய பட்டங்கள் பெற்றவர்.*

*1956-ஆம் ஆண்டு, ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டுவதற்காக விருதுநகரில் உண்ணாவிரதம் இருந்த சங்கரலிங்கனாருடன் சில மாணவர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் அமுதன் என, அவர் குறித்த குறிப்புகள் பள்ளிப்பருவத்தில் இருந்தே அவரது அரசியல் ஆர்வத்தை அடையாளம் காட்டும்.*

## மாணவர் முன்னேற்றக் கழகம்

*விருதுநகர் கல்லூரியில் தமிழ் மன்றச் செயலாளர், கல்லூரி மாணவர் பேரவைச் செயலாளர், மாணவர் பேரவைத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்துப் பணியாற்றியுள்ளார். கல்லூரியில் மாணவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். விருதுநகரில், இராமநாதபுரம் மாவட்ட திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து மாநாட்டினைச் சிறப்பாக நடத்திய பெருமை இவருக்கு உண்டு. மாணவர் தி.மு.க. வளர்ச்சியில் ஈடுபட்ட முன்னோடிகளில் இவரும் ஒருவராகத் திகழ்ந்தவர்.*

*கலைஞரிடமும் பேராசிரியரிடமும் அவர் கொண்டிருந்த நேசம் அளவிடமுடியாதது. கல்லூரியில் பேராசிரியர் அன்பழகனின் தம்பி க.திருமாறனின் மாணவராகப் பயின்றவர். கல்லூரியில் மாணவர் பேரவைத் தலைவராக இருக்கும்போது 1960-ஆம் ஆண்டில் கலைஞரை அழைத்து வந்து கூட்டம் நடத்தியவர் அமுதன். அன்று **‘குறளோவியம்’** என்ற தலைப்பில் உரையாற்றி இருக்கிறார் கலைஞர்.*

*அமுதன் தலைமை வகிக்க, அந்தக் கல்லூரியில் இனமானப் பேராசிரியர் ஆற்றிய உரையின் தலைப்பு ‘பிராமணன் பிறக்கவில்லை’ என்பது. இப்படி கலைஞர், பேராசிரியர் ஆகியோரை ஸ்ரீவில்லிபுத்தூர் அழைத்து வந்து கூட்டம் நடத்தும் அளவுக்கு அவர்களுடன் நல்ல நட்பு கொண்டிருந்தவர். 1964-ஆம் ஆண்டு, இவர் எழுதி வெளியிட்ட ‘அமுதனின் சிறுகதைகள்’ நூலுக்குச் சிறப்பான அணிந்துரை வழங்கி இருக்கிறார், கலைஞர்.*

## சிறைவாழ்க்கை

*அண்ணாவுக்குத் தம்பியாக, அவரிடம் நன்மதிப்பையும் பெற்றிருந்தவர் அமுதன். கழக நடவடிக்கைகளிலும், கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றுள்ளார். விலைவாசி உயர்வு எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறைக்குச் சென்றுள்ளார்.*

*1960-ஆம் ஆண்டு ‘ஆகாசவாணி’ எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை, விருதுநகர் ரயில் நிலையத்தில், ‘இந்தி எழுத்து அழிப்பு’க்குச் சிறை, 1962-ஆம் ஆண்டு விலைவாசி எதிர்ப்புப் போராட்டத்தில் மதுரை, திருச்சி சிறையில் 5 மாதம் சிறை கண்டவர்.*

> **“தலைவா! உன் நெஞ்சத்தில் இருக்குமளவுக்குக் கடந்த 45 ஆண்டு காலமாக, என் பால்ய காலம் தொட்டு வெறிபிடித்த கழகத் தோழனாகப் பணிபுரிந்து வந்துள்ளேன்.**

*1963- ஆம் ஆண்டு சட்டநகல் எரிப்புப் போராட்டத்தின்போது அமுதனை சென்னைக்கு அழைத்தார் அண்ணா. ‘தம்பி அமுதன், ஸ்டார்ட் இமிடியட்லி, யுவர் பிரசன்ஸ் ஈஸ் எசன்ஷியல் டுமாரோ’ என்று தந்தி கொடுத்து அழைத்து சென்னை போராட்டக் களத்தில் ஈடுபடுத்தி இருக்கிறார் அண்ணா.*

*1976-ஆம் ஆண்டு, மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறை, 1987-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சிறை என 30 முறைக்கு மேல் சிறைக்குச் சென்ற அனுபவங்களைக் கொண்டவர் அமுதன்.*

## அமுதனின் பேச்சு

*ஸ்ரீவில்லிபுத்தூர் நகர மன்றத் தேர்தலில் நின்ற போதும் தோற்றார். சிவகாசி சட்டமன்றத்துக்கு நின்றபோதும் தோற்றார். ‘தேர்தலுக்கு அமுதன் நிற்பார், வழக்கமாக தோற்பார்’’ எனப் பேராசிரியர் நகைச் சுவையாக குறிப்பிட்டுள் ளார். “அமுதன் பேசினால், அடடா அதற்குள் முடித்துவிட்டாரே என்று நினைக்கும்படி பேசுவார்” என கலைஞர் குறிப் பிட்டுள்ளார். தேர்தல் அரசியல் அவருக்கு கைகூடவில்லை. அதனால்தான் இலக்கிய அணியில் மனநிறைவான வேலைகளைப் பார்த்தபடி இருந்தார் எனக் குறிப்பிடுகிறார், பத்திரிகையாளர் திருமாவேலன்.*

*2000-ஆம் ஆண்டில் கழகத்தின் முப்பெரும் விழா விருதுகளில், அந்த ஆண்டிலிருந்து முதன்முறையாக அறிவிக்கப்பட்ட ‘பாவேந்தர் பாரதிதாசன் விருது’ அமுதனுக்கு அளித்துப் பெருமைப்படுத்தினார் கலைஞர். அன்று ‘முரசொலி’ நாளிதழில் முதல் பக்கத்தில் **“வைரத்துக்கு முன் வைக்கப்பட்ட கூழாங்கல்”** என்ற தலைப்பில் கலைஞர் எழுதிய கடிதத்தில்,*

*“கழகத்தின் சரித்திரத்தில் ஆட்சியில் இருந்த காலத்தைவிட, போராட்டக் களத்தில் நின்ற எதிர்நீச்சல் காலமே மிகுதியானது. அந்தப் போராட்ட காலத்தில் எல்லாம் களம் புகுந்த அமுதன்கள் ஆயிரம், பத்தாயிரம், லட்சம் பேர் என்பதால்தான் மிரட்டிய மிசா கொடுமைகளைக்கூட பின்னங்கால் பிடரியில்பட ஓடிடச் செய்ய நம்மால் முடிந்தது.*

*இந்த நிகழ்வுகளை எல்லாம் நினைவுக்குக் கொண்டு வரும்போது-இன்றைய பதவி, பவிசு, அனைத்தும் வைரத்துக்கு முன் வைக்கப்பட்ட கூழாங்கல்லாகத் தெரிகிறதல்லவா? எனக்கு அப்படித்தான் தெரிகிறது’’என எதையும் எதிர்பாராமல் வாழ்ந்த அமுதனைப் புகழ்ந்திருந்தார் கலைஞர்.*

*பாவேந்தர் பாரதிதாசன் விருதின்போது, அமுதன் வெளியிட்ட தன்னைப் பற்றிய குறிப்பு நூலில், கலைஞருக்கு அவர் எழுதி இருந்த கடிதமும் புகைப்படமாக இருந்தது. “தலைவா! உன் நெஞ்சத்தில் இருக்குமளவுக்குக் கடந்த 45 ஆண்டு காலமாக, என் பால்ய காலம் தொட்டு வெறிபிடித்த கழகத் தோழனாகப் பணிபுரிந்து வந்துள்ளேன். வாழ்நாள் முழுவதும் தடம் புரளாத் தம்பியாகப் பணிபுரிவேன் என்று உறுதி கூறுகிறேன்” என அப்போது எழுதி இருக்கிறார்.*

*கலைஞரிடம் கூறியபடியே, அவருடைய தடம்புரளாத் தம்பியாக வாழ்ந்து, 2019-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17-ஆம் தேதி வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார் ச.அமுதன்.*

*எந்தச் சூழ்நிலையிலும் கட்சி மாறாமல் இருந்ததை, சிறையில் இருந்து எழுதிய கடிதங்களே சொல்லும். பெரியார் வழித்தடத்தில் பகுத்தறிவுப் பற்றும், அண்ணா வழியில் மொழி இனமானப் பற்றும், தலைவர் கலைஞர் தலைமையில் உறுதி கொண்ட கட்சிப் பணியும் பெரிதென வாழ்ந்த அமுதன், என்றும் நினைவில் வாழ்வார்.*

**...துடிக்கும்**

## வாழ வைக்கும் கலைஞர்!



சென்னை, கிண்டியில் ரூ.230 கோடி மதிப்பில், 1,000 படுக்கைகளுடன் அமைக்கப்பட்ட ‘கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை’ குறுகிய காலத்திலேயே பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. சுமார் 51 ஆயிரத்து 429 சதுர மீட்டர் பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 மேல் தளங்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனையை, கடந்த ஆண்டு ஜூன் மாதம் 15 -ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த ஓராண்டு காலத்தில், புறநோயாளிகள் 3 லட்சத்து 37 ஆயிரத்து 275 பேர்களும், உள்நோயாளிகள் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 497 பேர்களும், சிகிச்சை பெற்றுள்ளனர். 3 ஆயிரத்து 881 பேர்களுக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேபோல் அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறும் வகையில், என்.எச்.ஐ.எஸ். (National Health Insurance Scheme – NHIS) திட்டத்தைப் பயன்படுத்தி, இலவச சிகிச்சையைப் பெறலாம் என்னும் புதிய திட்டம் தொடங்கப்பட்டது. இது தவிர, எம்.பி.க்கள், நீதிபதிகள், ஒன்றிய அரசு ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் இந்த மருத்துவமனையில் இலவச சிகிச்சை பெற சி.ஜி.எச்.எஸ். (Central Government Health Scheme – CGHS) எனும் திட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்யப்பட்டுள்ளது. தற்போது, மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், இந்தியப் பசுமைக் கட்டட கவுன்சில் (IGBC Healthcare Projects) தங்க தரச் சான்றினையும் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனைக்கு அளித்துள்ளது.

கலைஞர் நூற்றாண்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் உருவாக்கப்பட்ட இந்த மருத்துவமனை, இன்று இந்திய அளவில் கவனிக்கப்படும் வகையில் வளர்ந்து, ‘என்றென்றைக்கும் எல்லோரையும் வாழ வைக்கும் கலைஞர்” எனப் புகழ் பரப்பியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



**தி.குப்புராஜ்**



### தளபதிக்கு வரவேற்பு!

என் மாமா தி.குப்புராஜ் அவர்கள், கிளைச் செயலாளராகத் தொடங்கி இரண்டு முறை மாவட்டப் பிரதிநிதியாகப் பணியாற்றியவர். 2001-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள், திண்டுக்கல் மாவட்டத்திற்குப் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்திருந்தார். அப்போது, அவரை ஒட்டன்சத்திரம் ‘பரப்பலாறு இல்லத்தில்’ வரவேற்று என் மாமா அவர்கள் சால்வை அணிவித்து, சிறப்பு செய்தார். அருகில், அன்றைய கொடைக்கானல் நகராட்சித் தலைவர் வடிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

**– க.சுரேஸ்குமார்**
**தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர், பழனி கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### நந்தம்பாக்கம் வர்த்தக மையம்!

2001-ஆம் ஆண்டில், ஜனவரி 31-ஆம் தேதி, சென்னையில் நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தைத் திறந்து வைத்தார் கலைஞர். மத்திய அமைச்சராக இருந்த முரசொலி மாறன் அவர்களின் முயற்சியில், சென்னை, வர்த்தக மையம் அமைந்தது. அந்த வர்த்தக மையம் அமைப்பதற்காக, தமிழ்நாடு அரசு 25.48 ஏக்கர் நிலம் வழங்கியது. தமிழ்நாட்டுத் தொழில் வளர்ச்சியில் அந்த மையம் குறிப்பிடத்தக்கப் பங்காற்றி வருகிறது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

614

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131